بسم الله الر حمن الرحيم

# சுவனப் பாதை

ஈருலக வெற்றியின் வழிகாட்டி

வெளியீடு: இஸ்லாமிய அழைப்பகம், ஜித்தா (ஸனாய்யியா) இதழ்: 1:12, ரமலான், 1426, பக்கங்கள்-12

P.O.Box-32628, Jeddah-21438, e-mail : suvanam@gmail.com

# அல்-குர்ஆனின் சிறப்புகள்

*(நெல்லை இப்னு கலாம் ரசூல்)*

அல்லாஹ் மனிதனைப் படைத்து அவன், தான் விரும்புவது போல் வாழ்ந்து கொள்ள விட்டுவிடாமல் வாழ்க்கை நெறியை வேதங்களின் மூலமும் தூதர்களின் மூலமும் வகுத்துக் கொடுக்கின்றான். இந்த அடிப்படையில் மனித சமுதாயத்திற்கு வேதமாக அல்குர்ஆனையும் தூதராக முஹம்மது(ஸல்) அவர்களையும் அனுப்பியுள்ளான். எனவே நமது வாழ்க்கையை மன இச்சைப்படி அமைத்துக் கொள்ளாமல் அல்குர்ஆனும் நபிமொழியும் காட்டித்தரும் நெறியிலேயே அமைத்துக் கொள்ள வேண்டும். இதுவே முஸ்லிமின் உயரிய பண்பும் குர்ஆன் மற்றும் ஹதீஸின் எதிர்பார்ப்புமாகும். மார்க்கத்தின் இவ்விரு அங்கங்களில் முதலிடம் பெறுவது அல்குர்ஆன் ஆகும்.

## உள்ளே...

தேர்ந்தெடுக்கப்பட்ட பிரார்த்தனைகள் - 6

ஆண்மைக் குறைவு, இரத்த அழுத்தம் - 8

மாபெரும் அறிவுப் போட்டி - 9

ராஜ நாகம் மற்றும் கீரிப்பிள்ளை- 11

குறுக்கெழுத்துப் போட்டி - 12

அல்குர்ஆனுடன் இரண்டு விதமான தொடர்புகளை ஏற்படுத்துவது ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கட்டாயக் கடமையாகும்.

1. திருக்குர்ஆனை பொருளறிந்து படிப்பது. அதன் கட்டளைகளைப் புரிந்து அதன் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்வது.

2. அல்குர்ஆனை அதிகமாக ஓதி அளவற்ற நன்மையைப் பெற்றுக் கொள்வது.

### 1. அல்குர்ஆனை பொருளறிந்து படிப்பது

திருமறையை சூரத்துல் ∴பாத்திஹாவிலிருந்து சூரத்துன்னாஸ் வரை முழுமையாகப் படித்து அதன் செய்திகளை அறிந்து கொள்ளவேண்டும். அதன் கட்டளைகளுக்கு கட்டுப்படுவது, அது தடுக்கும் செயல்களை விட்டும் விலகிக் கொள்வது. அதில் கூறப்பட்ட சம்பவங்களின் மூலம் படிப்பினை பெறுவது, இவ்வாறு அல்குர்ஆனோடு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது முஸ்லிம்கள் அனைவரின் மீதும் கட்டாயக் கடமையாகும். நபி(ஸல்) அவர்களின் குணநலன் அல்-குர்ஆனாகவே இருந்தது என்று

*-தொடர்ச்சி அடுத்த பக்கம் பார்க்க....*

# பிரார்த்தனையின் முக்கியத்துவம் மற்றும் ஒழுக்கங்களும்

***- K.L.M . இப்ராஹீம் மதனி. M.A***

சந்தேகமின்றி ஒரு விசுவாசி, எல்லா நிலைகளிலும் எங்கிருந்த போதிலும் அவனுடைய இறைவனிடமே பிரார்த்திக்க வேண்டும். அந்த தூய்மையான இறைவன் தன் அடியார்களுக்கு மிக சமீபத்தில் இருக்கின்றான். உயர்வானவனாகிய அல்லாஹ் தன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

**(நபியே!) என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்டால் "நிச்சயமாக நான் சமீபமாகவே இருக்கிறேன், பிரார்த்தனை செய்பவரின் பிரார்த்தனைக்கு அவர் பிரார்த்தித்தால் விடையளிக்கிறேன். அவர்கள் என்னிடமே (பிரார்த்தித்துக்) கேட்கட்டும், என்னையே நம்பட்டும். அப்பொழுது அவர்கள் நேர்வழியை அடைவார்கள்" என்று கூறுவீராக.**

*(அல்குர்ஆன் 2: 186)*

**இன்னும் உங்களுடைய இரட்சகன் கூறுகிறான், நீங்கள் என்னையே அழை(த்துப் பிரார்த்தி)யுங்கள், நான் உங்களு(டைய பிரார்த்தனை)க்கு பதிலளிப்பேன். நிச்சயமாக, என்னை வணங்குவதை விட்டும் பெருமை அடிக்கிறார்களே, அத்தகையோர் அவர்கள் இழிவடைந்தவர்களாய் நரகம் புகுவார்கள்.**

*(அல்-குர்ஆன் 40: 60)*

உயர்ந்தவனாகிய உங்களின் இரட்சகன் வெட்கமுள்ளவன், சங்கையானவன் அவனிடன் இருகைகளையும் உயர்த்தினால் (பிரார்த்தித்தால்) அவ்விரண்டையும் வெறுமென திருப்பிவிட அவன் வெட்கப்படுகின்றான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

பாவம் சம்பந்தப்படாத இரத்த பந்தத்தை துண்டிக்காத விஷயத்தில் எந்த ஒரு முஸ்லிமாவது பிரார்த்தனை செய்தால் அல்லாஹ் அவனுக்கு மூன்றில் ஒன்றை கொடுக்காமலில்லை,

1. அவனின் பிரார்த்தனையை உடன் ஏற்றுக் கொள்கின்றான்.

2. அல்லது (அப்பிரார்த்தனையை ஏற்றுக் கொள்ளாமல்) அதனுடைய நன்மையை மறுமைக்காக சேகரித்து வைக்கின்றான்.

3. அல்லது அப்பிரார்த்தனையைப் போன்று (அவனுக்கு நேரவிருந்த) ஒரு ஆபத்தை தடுத்து விடுகின்றான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள், அப்படியானால் நாம் அதிகம் பிரார்த்தனை செய்வோமே என்றனர். அதற்கு நபி(ஸல்) அவர்கள், அல்லாஹ்விடம் மிகவும் அதிகம் இருக்கின்றது எனக்கூறினார்கள்.

ஆகவே இந்த புனித ரமலான் மாதத்தில் வல்ல இறைவன் அல்லாஹு"விடம் அதிகமதிகம் பிரார்த்தனை செய்ய வேண்டும். குறிப்பாக பாவமன்னிப்புத் தேட வேண்டும். அவன்

*-தொடர்ச்சி 4-ஆம் பக்கம் ....*

அன்னை ஆயிஷா(ரலி) அவர்கள் கூறியதின் பொருளும் இதுதான். எனவே நம்முடைய வாழ்க்கையை முற்றிலும் அல்-குர்ஆனுக்கு கட்டுப்படும் வாழ்க்கையாக அமைத்துக் கொள்ளவேண்டும். அதுவே அல்-குர்ஆன் இறக்கி அருளப்பட்டதின் மகத்தான நோக்கமாகும்.

இந்த நோக்கத்தைப் புரிந்து கொண்ட நபித்தோழர்களும் நபித்தோழியர்களும் அல்-குர்ஆனுக்கு இணங்க தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். ஒவ்வொரு வசனம் இறங்கும் போதும் அதன் கட்டளைகளுக்கு உடனே கட்டுப்படுபவர்களாக இருந்தனர். இதற்கு வரலாற்றில் எத்தனையோ சான்றுகள் உள்ளன. எனவே நாமும் அல்குர்ஆனைப் படித்து, அதன் அடிப்படையில் செயல்பட்டு ஈருலக வெற்றியைப் பெறுவோமாக!

திருக்குர்ஆன் பொதுமக்களுக்குப் புரியாது என்று கூறுவது தவறான கூற்றாகும். திருக்குர்ஆனின் அர்த்தம் மற்றும் விளக்கங்களை நேரடியாக அறிவதற்கு அரபி மொழியில் புலமை அவசியம் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மொழி பெயர்க்கப்பட்டவற்றைப் படித்து அதில் உள்ள செய்திகளை ஒவ்வொருவரும் அவரவரின் அறிவுக்கு ஏற்றவாறு புரிந்து கொள்ள முடியும். ஒரு நூல் மொழிபெயர்க்கப்படுகிறது என்றால் அந்த மொழியை அறியாதவர்கள் அதனை புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்குத்தான். எனவே குர்ஆனை அதன் மொழிபெயர்ப்பை புரிந்து கொள்ள முடியாதென்பது தவறானதும் அல்லாஹ்வின் வேதவசனங்களுக்கு மாற்றமான கூற்றுமாகும். அல்லாஹ் இதனை 54: 32, 47: 24 வசனங்களின் மூலம் உணர்த்துகிறான்.

> குர்ஆன் உயிருடன் இருக்கும் போதே படித்து நேர்வழி பெறுவதற்குத்தானேயொழிய இறந்த பின் மரணித்தவர்களுக்கு குர்ஆனை அஞ்சல் செய்வதற்கு இல்லை.

நிச்சயமாக இக்குர்ஆனை நன்கு நினைவு படுத்திக் கொள்ளும் பொருட்டே எளிதாக்கி வைத்திருக்கின்றோம் எனவே இதிலிருந்து நல்லுணர்வு பெறுவோர் உண்டா? *(அல்-குர்ஆன் 54:32)*

மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்கள் (இருக்கின்றனவே) அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா? *(அல்-குர்ஆன் 47:24)*

### 2. அல்குர்ஆனை ஓதுதல்

பொருளறியாமல் படித்தாலும் ஆன்மீக ரீதியாக நன்மையை பெற்றுத்தரும் ஒரே நூல் அல்குர்ஆன் மட்டும்தான். திருக்குர்ஆனை ஓதுவதில் எண்ணிலடங்கா நன்மைகள் கிடைக்கின்றன. அல்குர்ஆனை முறையாக, புரிந்து ஓதுபவர் மறுமையில் மலக்குமார்களுடன் இருப்பார். திருமறையைப் படித்தவர்களுக்காக அது மறுமையில் அல்லாஹ்விடம் சிபாரிசு செய்யும். இதுபோன்ற இன்னும் பல நன்மைகளும் சிறப்புக்களும் உள்ளன. எனவே பொருட்செலவோ, கடின உடலுழைப்போ இன்றி குறைந்த நேரத்தில் நிறைந்த நன்மையைப் பெற்றுத் தரும் திருமறையை அதிகமாக ஓதிடவேண்டும்.

குறிப்பாக ரமலான் மாதத்தில் அதிமாக ஓதவேண்டும். ரமலான் மாதத்தில் ஒவ்வொரு முஸ்லிம் ஒரு தடவையாவது குர்ஆனை முழுமையாக ஓதி முடிப்பது நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டுதலில் ஒன்றாகும்.

நபி(ஸல்) அவர்களுக்கு ஒவ்வொரு வருடமும் ரமலானில் ஒரு தடவை குர்ஆனை ஓதிக் காண்பிக்கப்பட்டது. அவர்கள் மரணிக்கும் வருடம் இரண்டு தடவை ஓதிக் காண்பிக்கப்பட்டது. *(அறிவிப்பவர்: அபூஹுரைரா(ரலி) - ஆதாரம் : புகாரி)*

### அல்குர்ஆனின் எழுத்துக்களை முறையாக உச்சரித்து, நிறுத்தி, நிதானமாக, ஓதவேண்டும்.

(நபியே! இரவுத் தொழுகையான) அதில் குர்ஆனை (நன்கு திருத்தமாக) நிறுத்தி, நிறுத்தி ஓதுவீராக! என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். குர்ஆனை அழகாக, ராகமாக, ஓதாதவன் நம்மைச் சார்ந்தவனல்ல என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

குர்ஆனை ஓதுவதை விட்டும் பொடுபோக்காக இருக்கும் சகோதர, சகோதரிகளே! நாளை மறுமை நாளில் ஒரு நன்மைக்காக அங்கும் இங்கும் ஓடித் திரிந்து அல்லோலப்பட்டும் அது கிடைக்காமல் நரகில் விழ நேரிடும் அந்நாளை நாம் மறந்து விடக்கூடாது. இதோ குர்ஆனின் சிறப்புக்கள் குறித்து குர்ஆன் மற்றும் நபிமொழிகள் கூறிய ஒருசில சிறப்புக்கள்:-

### குர்ஆன் குறித்து குர்ஆன் கூறுவது

1. குர்ஆனை புரிந்து கொள்வது எளிது - **நிச்சயமாக இக்குர்ஆனை நன்கு நினைவு படுத்திக் கொள்ளும் பொருட்டே எளிதாக்கி வைத்திருக்கின்றோம் எனவே இதிலிருந்து நல்லுணர்வு பெறுவோர் உண்டா?** *(அல்-குர்ஆன் 54:32)*

2. **சிந்திக்கத் தூண்டும் குர்ஆன்**

- மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்கள் (இருக்கின்றனவே) அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா? (அல்குர்ஆன் 47:24)

3. குர்ஆன் விசுவாசிகளுக்கு அருமருந்து - **இன்னும், நாம் முஃமின்களுக்கு ரஹ்மத்தாகவும், அருமருந்தாகவும் உள்ளவற்றையே குர்ஆனில் (படிப்படியாக) இறக்கிவைத்தோம் ஆனால் அக்கிரமக் காரர்களுக்கோ இழப்பைத் தவிர வேறெதையும் (இது) அதிகமாக்குவதில்லை.** *(அல்-குர்ஆன் 17:82)*

4. குர்ஆன் மனிதர்களின் இதய நோய்நிவாரணி - **மனிதர்களே! உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு நிச்சயமாக ஒரு நல்லுபதேசமும் வந்துள்ளது. (உங்கள்) இதயங்களிலுள்ள நோய்களுக்கு அருமருந்தும் (வந்திருக்கிறது) மேலும் (அது) முஃமின்களுக்கு நேர்வழிகாட்டியாகவும், நல்லருளாகவும் உள்ளது.** *(அல்-குர்ஆன் 10:57)*

5. குர்ஆனை ஓதும் முன்பு ஷைத்தானிய தீண்டுதலிருந்து அல்லாஹ்விடம் பாதுகாப்புக் கோருதல் - **மேலும் (நபியே!) நீர் குர்ஆனை ஓதுவீராயின் (முன்னதாக) விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் காவல் தேடிக்கொள்வீராக.** *(அல்-குர்ஆன் 16:98)*

6. குர்ஆன் எழுத்து வடிவில் நபிக்கு அருளப்படவில்லை - **காகிதத்தில் (எழுதப்பட்ட) ஒரு வேதத்தையே நாம் உம் மீது இறக்கி வைத்து, அதனை அவர்கள் தம் கைகளால் தொட்டுப் பார்த்தபோதிலும், "இது பகிரங்கமான சூனியத்தைத்தவிர வேறில்லை என்று அந்நிராகரிப்போர் நிச்சயமாக சொல்வார்கள்.**

***(அல்-குர்ஆன் 6:7)***

7.குர்ஆன் நபியின் சொந்த கூற்றல்ல - **அகிலத்தாருக்கெல்லாம் இறைவனிடமிருந்து (இது) இறக்கியருளப்பட்டதாகும். அன்றியும், நம்மீது சொற்களில் சிலவற்றை இட்டுக் கட்டிக் கூறியிருப்பாரானால், அவருடைய வலக்கையை நாம் பற்றிப் பிடித்துக் கொண்டு பின்னர், அவருடைய நாடி நரம்பை நாம் தரித்திருப்போம்.**

***(அல்-குர்ஆன் 69: 43-46)***

## குர்ஆன் குறித்து நபிமொழிகள் கூறுவது

1. நிச்சயமாக இந்தக் குர்ஆன் பரிந்துரை செய்யக்கூடியதாகும். அது ஏற்கப்படக்கூடியதுமாகும். அதனைப் பின்பற்றினால் அவரை அது சுவனத்தில் சேர்க்கும். அதனை பின்பற்றாமல் விட்டு விட்டால் அல்லது நிராகரித்தால் அவன் நரகின் அடித்தளத்தில் தள்ளப்படுவான். *(அறிவிப்பாளர்: இப்னு மஸ்வூத்(ரலி) – ஆதாரம் : முஸ்லிம்)*

2. குர்ஆனை ஓதி அதன்படி அமல் செய்தவரையும், குர்ஆனையும் நாளை மறுமையில் கொண்டு வரப்படும், குர்ஆனின் இரண்டு அத்தியாயங்கள் அல்பகரா, ஆல இம்ரான் முன் வந்து அந்த இரண்டையும் ஓதியவருக்காக அல்லாஹ்விடத்தில் வாதாடும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ஆதாரம்: முஸ்லிம்

3. குர்ஆனின் விஷயத்தில் தர்க்கம் புரிவது இறை மறுப்புச் செயலாகும்.
*அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) - ஆதாரம் : அபூதாவூத்*

4. குர்ஆனைத் தானும் கற்று பிறருக்கும் கற்றுக் கொடுப்பவரே உங்களில் சிறந்தவர்.
*அறிவிப்பாளர்: உஸ்மான்(ரலி) – ஆதாரம் : புகாரி*

5. இக்குர்ஆனின் ஒரு முனை அல்லாஹ்வின் கையிலும் மறுமுனை உங்கள் கைளிலும் உள்ளது. எனவே இதனை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இம்மையில் வழிதவறமாட்டீர்கள், மறுமையில் அழிவுறவும் மாட்டீர்கள். *(அறிவிப்பாளர்: அபூஹுரைரா(ரலி) - ஆதாரம் : தப்ரானி )*

6. பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிகாட்டுதல்களில் மிகச்சிறந்தது முஹம்மது(ஸல்) அவர்களின் பாதையாகும். தீனில் தீமையானது மார்க்கத்தில் புதிதாகப் புகுத்தப்பட்டதாகும். ஒவ்வொரு பித்அத்தும் வழிகேடாகும். *(ஆதாரம் : முஸ்லிம்)*

7. இவ்வேதத்தைக் கொண்டே அல்லாஹ் சில கூட்டத்தாரை உயர்த்துகிறான். மற்றோரு கூட்டத்தினரை இதனைக் கொண்டே தாழ்த்துகிறான். சமுதாய உயர்வு, தாழ்வுக்கு காரணம் குர்ஆனே. *(அறிவிப்பாளர்: உமர்(ரலி) - ஆதாரம் : முஸ்லிம்)*

8. குர்ஆனின் சிறு பகுதியேனும் யார் உள்ளத்தில் மனனம் இல்லையோ அவர் உள்ளம் பாழடைந்த வீட்டைப் போன்றது *அறிவிப்பாளர்: இப்னு அப்பாஸ்(ரலி) – ஆதாரம் : திர்மிதி*

9. எவர் குர்ஆனிலிருந்து ஒரு எழுத்தை ஓதினால் நன்மை இருக்கிறது. ஒரு நன்மை அதுபோன்று பத்து மடங்காக்கப்படும். "அலீஃப், லாம், மீம்" ஒரு எழுத்து என்று சொல்லமாட்டேன். மாறாக அலீஃப் ஒரு எழுத்து, லாம் ஒரு எழுத்து, மீம் ஒரு எழுத்துமாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பாளர் : இப்னு மஸ்வூத்(ரலி) - ஆதாரம் : திர்மிதி, தாரமி.)*

10. குர்ஆனை ஓதக்கூடியவருக்கு உவமைகளையும், ஓதாமல் இருப்பவருக்கு உவமைகளையும் பெருமானார்(ஸல்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். குர்ஆனை ஓதக்கூடிய முஃமினின் உவமை பழத்தைப் போன்றது. அதனுடைய வாசனையோ மணமானது. அதனுடைய சுவையோ ருசிக்கத்தக்கது. குர்ஆனை ஓதாத மூஃமீனின் உவமை பேரித்தம் பழத்தை போன்றது. அதற்கு வாசனை இல்லை. அதனுடைய சுவையோ இனிப்பானது. குர்ஆனை ஓதாத நயவஞ்சகனின் உவமை குமட்டிக்காய் போன்றது. அதற்கு வாசனை இல்லை. அதனுடைய சுவையோ கசப்பானது. குர்ஆனை ஓதக்கூடிய நயவஞ்சகனின் உதாரணம் துளசி செடியை போன்றது. அதனுடைய வாசனை மணமானது. அதனுடைய சுவையோ கசப்பானது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பாளர்: அபு மூஸா(ரலி) - ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)*

11. யார் குர்ஆனை ராகமாக (தஜ்வீத்துடன்) ஓதவில்லையோ அவர் நம்மைச் சார்ந்தவரல்ல. *(அறிவிப்பாளர்: பசீர் பின் அப்துல் முன்திர்(ரலி) - ஆதாரம் : அபூதாவூத்)*

12. குர்ஆனைக் கற்றுக் கொள்ளுங்கள் மேலும் அதை ஓதுங்கள். குர்ஆனைக் கற்று அதனை ஒதி அதன் அடிப்படையில் நடப்போருக்கு உவமையானது கஸ்தூரியால் நிரப்பப்பட்ட பையைப் போன்றது. அது அனைத்து இடங்களிலும் மணம் வீசிக்கொண்டிருக்கும். குர்ஆனைக் கற்று அது அவருடைய உள்ளத்தில் பசுமையாய் பதிந்தும் அதனடிப்படையில் நடக்கவில்லையோ அவரின் உவமை கஸ்தூரியால் நிரப்பப்பட்ட பையை அது பரவாமல் கட்டிக்கொண்டவரைப் போல என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பாளர்: அபுஹுரைரா(ரலி) - ஆதாரம் : திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா)*

13. நாங்கள் திண்ணையில் அமர்ந்து இருக்கிற சமயத்தில் பெருமானார்(ஸல்) எங்களிடம் வந்து உங்களிடம் பாவம் செய்யாது சொந்த பந்தங்களை துண்டிக்காத நிலையில் ஒவ்வொரு நாளும் புத்ஹான் அல்லது ஹதீக் என்ற இடத்திற்கு சென்று திமில்களுடைய இரண்டு ஒட்டகங்களை கொண்டு வர யார் விரும்புவார்? என வினவினார்கள். நாங்கள் அனைவரும் இதை விரும்புவோம் என்று பதிலளித்தோம். உங்களில் ஒருவர் பள்ளிவாசல் பக்கம் செல்லக்கூடாதா? அவ்வாறு சென்று அல்லாஹ்வுடைய வேத்தில் இரண்டு வசனங்களை ஓதுதல் அல்லது கற்றல் இரண்டு ஒட்டகங்களை விட சிறந்தது. மூன்று வசனங்களை ஓதுவது மூன்று ஒட்டகங்களை விட சிறந்தது. நான்கு வசனங்களை ஓதுவது நான்கு ஒட்டகங்களை விட சிறந்தது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். உங்களில் ஒருவர் தன்னுடைய இல்லத்திற்கு செல்லும்போது தன்னுடன் நல்ல கொழுத்த மூன்று ஒட்டகங்களை பெற்றுச் செல்லவேண்டும் என்று விரும்புவாரா? என்று வினவினார்கள். நாங்கள் அனைவரும் அதை விரும்புவோம் என்று கூறினோம். மூன்று (குர்ஆனிய) வசனங்களை உங்களில் ஒருவர் தன்னுடைய தொழுகையில் ஓதுவது அவருக்கு நல்ல கொழுத்த மூன்று ஒட்டகங்கள் கிடைப்பதை விட சிறந்தது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பாளர்: அபுஹுரைரா(ரலி) - ஆதாரம் : முஸ்லிம், இப்னுமாஜா)*

14. குர்ஆனை ஓதுவதில் தேர்ச்சி பெற்றவர் கண்ணிமிக்க வானவர்களுடன் இருப்பார். குர்ஆனை ஓதுவது சிரமமாக இருப்பினும் அதைத் திருப்பித்திருப்பி சிரமத்துடன் ஓதுவாரானால் அவருக்கு இரண்டு கூலி இருக்கிறது என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பாளர்: ஆயிஷா(ரலி) - ஆதாரம் : புகாரி, முஸ்லிம்)*

15. மறுமை நாளில் குர்ஆனை ஓதி அதனடிப்படையில் நடந்தவரிடம் குர்ஆனிய தோழரே ஓதுவீராக என்று கூறப்படும். மேலும் உலகத்தில் எவ்வாறு நிறுத்தி நிதானமாக ஓதினீரோ அவ்வாறு ஓதுவீராக! நிச்சயமாக எந்த வசனத்தை கடைசியாக ஓதி முடிப்பாரோ அதுதான் சொர்க்கத்தில் உமது அந்தஸ்தாகும் என்று கூறப்படும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பாளர்: அப்துல்லா பின் அம்ர்(ரலி) - ஆதாரம் : அபூதாவுத், திர்மிதி)*

16. குர்ஆனை ஓதிய தோழர் மறுமையில் வருவார். அப்போது குர்ஆன் இறைவா இவருக்கு ஆடையை அணிவி என்று சொல்லும் அப்போது அவருக்கு உயர்ந்த கிரீடம் அணிவிக்கப்படும். இறைவா இவருக்கு உன் அருளை வழங்குவாயாக! என்று கூறும். அப்போது அவருக்கு உயர்ந்த சீருடை அணிவிக்கப்படும். பிறகு குர்ஆன் இவரை பொருந்திக் கொள்ளுமாறு சொல்லும் அவரை இறைவன் பொருந்திக் கொள்வான். அம்மனிதரிடம் குர்ஆனை நிறுத்தி நிதானமாக ஓதுவீராக!, அவர் ஓதுகிறபோது ஒவ்வொரு வசனத்திற்க்கும் ஒரு நன்மை அதிகப்படுத்தப்படும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பாளர்: அபுஹுரைரா(ரலி) - ஆதாரம் : திர்மிதி, இப்னு குஸைமா)*

குர்ஆன் உயிருடன் இருக்கும் போதே படித்து நேர்வழி பெறுவதற்குத்தானேயொழிய இறந்த பின் மரணித்தவர்களுக்கு குர்ஆனை அஞ்சல் செய்வதற்கு இல்லை.

**(இது) உயிரோடிருப்பவர்களை அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறது. நிராகரிப்பவர்களுக்கு (தண்டனையுண்டு என்ற) வாக்கை உண்மையென உறுதிப்படுத்துகிறது *(அல்குர்ஆன் 36: 70)***

குர்ஆனை அல்லாஹ் நமக்கு அருளிய நோக்கம் நாம் அதைப் படித்து, சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்பதற்குத்தான். ஆனால் முதிய வயதை அடைந்தும் குர்ஆனை ஓதத் தெரியாதவர்கள் நம்மில் பலர் உள்ளனர். இது கவலை தரக்கூடிய ஒன்றாகும். முதிய வயதாகிவிட்டாலும் குர்ஆனைக் கற்றுக் கொள்ள முடியும் என்பது உண்மை. உங்களை மரணம் வந்தடைவதற்கு முன் குர்ஆனை ஓதத் தெரிந்தவர்களிடம் சென்று குர்ஆனை ஓதத் தெரிந்து கொள்ளுங்கள். புதிதாக இஸ்லாத்தை ஏற்ற பல சகோதரர்கள் குர்ஆனை சரளமாக ஓதவும், அதன்படி செயல்படவும் செய்கின்றார்கள். நாமோ பரம்பரை முஸ்லிம் என்று சொல்லிக்கொண்டு நமது வழிகாட்டியாகிய குர்ஆனைப் பற்றி எதுவும் தெரியாதவர்களாக இருக்கின்றோம். முஸ்லிம்களே! தயவு செய்து குர்ஆனைப் படியுங்கள் அதைப்படிப்பது மிகவும் இலகுவானது

நாம் இந்தக் குர்ஆனைப் படித்து, விளங்கி, அதன்படி செயல்பட வேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான். ஆகவே அன்புள்ள சகோதர சகோதரிகளே! குர்ஆனை அதிகமதிகம் ஓதுங்கள். அதன் கருத்துக்களை தர்ஜுமதுல் குர்ஆனில் விளங்கிப்படியுங்கள். அதன் படி செயல்படுங்கள். குர்ஆனைப் படித்து அதன்படி நடந்து ஈருலக வெற்றி பெற அல்லாஹ் நம் அனைவருக்கும் வாய்ப்பளிப்பானாக..!

---

*-முதல் பக்கத் தொடர்ச்சி...(பிரார்த்தனை...)*

நமது பிரார்த்தனைகளை ஏற்று எங்களின் பாவங்களையும் மன்னிப்பான். யார் ரமலான் மாதத்திலும் அல்லாஹுவிடம் பிழைபெறுப்புத் தேடவில்லையோ அவன் அல்லாஹுவின் அருளிலிருந்து தூரமாகட்டும் என ஜிப்ரீல் (அலை) அவர்கள் பிரார்த்திக்க நபி(ஸல்) அவர்கள் ஆமீன் கூறினார்கள். இந்தளவிற்கு அதிகம் ஆர்வமூட்டப்பட்ட ஒன்றுதான் ரமலான் மாதத்தில் செய்யும் பிரார்த்தனையும், பிழைபெறுப்பும். ஆனாலும், குறிப்பாக பின்னால் கூறப்படும் நேரங்கள், நிலைகள், இடங்களில் பிரார்த்தனைகளை அதிகமதிகம் செய்ய வேண்டும். அதேபோன்று பிரார்த்தனை செய்யும் முறைகளைப் பேணி நாமும் பிரார்த்தித்தால் அல்லாஹ் எங்களின் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்வான். இதோ பிரார்த்தனை செய்யும் ஒழுக்கங்களில் சில.

### பிரார்த்தனை செய்யும் ஒழுக்கங்களின் சில

1. தூய மனதோடு பிரார்த்தனை செய்ய வேண்டும்.

2. பிர்த்தனையைத் துவங்கும் போதும், முடிக்கும் போதும் அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்ந்து நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துக் கூறி பிரார்த்தனை செய்ய வேண்டும்.

3. பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடும், உறுதியோடும் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

4. அவசியத்தைக்கூறி பிரார்த்திக்க வேண்டும். பிரார்த்தனையில் அவசரப்படக்கூடாது. (அதாவது அல்லாஹ்விடம் ஒன்றிரண்டு முறைகள் பிரார்த்தனை செய்து, கேட்டது கிடைக்க வில்லையானால், அல்லாஹ்வின் மீது அவநம்பிக்கை கொண்டு, பிரார்த்தனையை விட்டுவிடுவது)

5. உள்ளச்சத்தோடு பிரார்த்திக்க வேண்டும்.

6. சந்தோஷ நேரத்திலும், கஷ்ட நேரத்திலும் பிரார்த்திக்க வேண்டும்.

7. அல்லாஹ்வைத் தவிர வேறு யாரிடமும் பிரார்த்திக்கக் கூடாது.

8. தன் குடும்பம், பொருள், பிள்ளை மற்றும் தனக்கும் கேடாக பிரார்த்தனை செய்யக் கூடாது.

9. சத்தத்தை மிகவும் உயர்த்தாமலும் மிகவும் குறைக்காமலும் அவ்விரண்டிற்கும் மத்தியில், நடு நிலையோடு பிரார்த்தனை செய்ய வேண்டும்.

10. செய்த பாவத்தை மனப்பூர்வமாய் ஏற்று, அதற்காக பிழை பொறுப்புத் தேடி, அல்லாஹ் அவருக்கு அளித்த அருட்கொடைகளை உளமார ஒப்புக்கொண்டு, அவற்றிற்காக அல்லாஹ்விற்கு நன்றி செலுத்த வேண்டும்.

11. துஆச் செய்யும் போது அளவுக்கு மேல் சிரமத்தை மேற்கொள்ளாமல் இருக்க வேண்டும்.

12. தெளிவான உள்ளத்தோடும் பயபக்தியோடும் அல்லாஹ்வின் அருள் மீது நம்பிக்கை வைத்து, அவனது தண்டனையிலிருந்து பயந்து பிரார்த்தனை செய்ய வேண்டும்.

13. மற்றவர்களின் பொருளை எடுத்து அல்லது அவர்களுக்கு அநியாயம் செய்திருந்தால் அந்தப் பொருட்களை உரியவர்களிடம் திருப்பிக் கொடுத்து அவர்களிடம் மன்னிப்புக் கேட்டபின் அப்பாவத்திற்காக தவ்பாச் செய்ய வேண்டும்.

14. (பிரார்த்திற்கும் ஒவ்வொன்றையும்) மும்மூன்று தடவை பிரார்த்திக்க வேண்டும்.

15. கிப்லாவை முன்னோக்க வேண்டும்.

16. பிரார்த்தனை செய்யும்போது கைகளை உயர்த்த வேண்டும்.

17. முடியுமாக இருந்தால் துஆச் செய்வதற்கு முன் ஒழுச் செய்து கொள்ள வேண்டும்.

18. ஒழுக்கத்துடன் அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்யவேண்டும். "துஆ" ஒரு வணக்கம் என்பதாக நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

19. முதலில் தனக்காக பிரார்த்தித்து பின்பு மற்றவர்களுக்காக பிரார்த்திக்க வேண்டும். இறைவா! எனது பாவங்களையும், இன்னாருடைய பாவங்களையும் மன்னிப்பாயாக என்று கேட்பது போல்.

20. அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள் மற்றும் அவனுடைய உயர்ந்த பண்புகளைக் கொண்டு அல்லது பிரார்த்தனை செய்பவர் தான் செய்த நல்அமல்களைக் கொண்டு அல்லது உயிரோடு வாழக்கூடிய நல்லவர்களிடம் (தனக்காக) பிரார்த்தனை செய்யும்படி கேட்டு (இஸ்லாத்தில் வஸீலா தேடுவதற்கு அனுமதிக்கப்பட்ட இம்மூன்று வகைகளில் ஒன்றைக் கொண்டு) அல்லாஹுவிடம் உதவி (வஸீலா) தேடவேண்டும்.

21. உணவு, குடிபானங்கள் அணியும் ஆடை இவைகள் ஹலாலானவைகளாக இருக்க வேண்டும்.

22. பாவமான காரியங்களுக்காக அல்லது இரத்த உறவுகளை முறிப்பதற்காக பிரார்த்தனை செய்யக் கூடாது.

23. பிரார்த்தனை செய்பவர் நன்மையை ஏவி தீமையைத் தடுத்து பாவங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொண்டவராக இருக்க வேண்டும்.

## பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும் நேரங்கள்

1. இரவின் நடுப்பகுதி

2. இரவில் கடைசி மூன்றாவது பகுதி

3. ஒவ்வொரு தொழுகையின் கடைசி நேரத்தில் (அதாவது அத்தஹியாத்தில் ஸலாம் கொடுப்பதற்கு முன்பு)

4. அதானுக்கும் இகாமத்திற்கும் மத்தியில்

5. பர்ளான தொழுகைக்கு அதான் சொல்லப்படும் போது

6. மழை பொழியும் போது

7. உண்மையான (நம்பிக்கையான) எண்ணத்துடன் ஸம்ஸம் தண்ணீரைக் குடிக்கும் போது

8. (தொழுகையில்) ஸுஜூது செய்யும் போது

9. ஒரு முஸ்லிம் தன்னுடைய இன்னொரு முஸ்லிம் சகோதரருக்கு செய்யும் பிரார்த்தனை

10. அரஃபாவுடைய நாளில் செய்யும் பிரார்த்தனை

11. தந்தை பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் தந்தைக்கும் செய்யும் பிரார்த்தனை

12. பிரயாணியின் பிரார்த்தனை

13. பெற்றோருக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பிள்ளையின் பிரார்த்தனை

14. சிறிய ஜம்ராவிற்குக் கல் எறிந்த பின் கேட்கும் பிரார்த்தனை

15. நடு ஜம்ராவிற்குக் கல் எறிந்த பின் கேட்கும் பிரார்த்தனை

16. கஃபாவிற்குள் கேட்கும் பிரார்த்தனை. ஹிஜ்ருக்குள் (கஃபத்துல்லாவோடு இருக்கும் அரைவட்ட வடிவத்திற்குள்) யார் தொழுகின்றாரோ அவர் கஃபாவிற்குள் தொழுதவரைப் போல் கணக்கிடப்படுவார்.

17. ஸஃபா மற்றும் மர்வா மலைகள் மீது கேட்கும் பிரார்த்தனை.

18. (முஸ்தலிஃபாவிலுள்ள) மஷ்அருள் ஹராம் என்னுமிடத்தில் கேட்கும் பிரார்த்தனை

19. நோன்பாளியின் பிரார்த்தனை.

20. நோன்பு திறக்கும் நேரத்தில் கேட்கும் பிரார்த்தனை ●

## நோயாளியின் நலம் விசாரிப்போம்!

நோய் விசாரிப்பவர் "நோயாளியை விட்டும்- திரும்பும் வரை சொர்க்கத் தோட்டத்தில் இருக்கின்றார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். *(அறிவிப்பவர் : ஸவ்பான்(ரலி), ஆதாரம்: முஸ்லிம்)*

நோய் விசாரிப்பவர் சொர்க்கப் பூங்காவில் இருக்கின்றார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது சொர்க்கப் பூங்கா என்றால் என்னவென கேட்கப்பட்டது. அதற்கவர்கள் சொர்க்கத் தோட்டம் என பதிலளித்தார்கள். *(அறிவிப்பவர் : ஸவ்பான்(ரலி), ஆதாரம்: முஸ்லிம்)*

யாரேனும் ஒரு முஸ்லிம் ஒரு முஸ்லிம் நோயாளியை காலையில் விசாரிக்கச் சென்றால் 70,000 மலக்குகள் அவருக்காக மாலை வரை பிரார்த்தனை செய்கின்றார்கள். அவர் மாலையில் விசாரிக்கச் சென்றால் காலை வரை 70,000 மலக்குகள் அவருக்காக பிரார்த்தனை செய்கின்றார்கள். மேலும் சொர்க்கத்தில் அவருக்குக் காய்த்துக் குலுங்கும் தோட்டம் உள்ளது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*(அறிவிப்பவர் : அலீ இப்னு அபீதாலிப்(ரலி), ஆதாரம்: திர்மிதி, இப்னுமாஜா, அபூதாவூத்)*

நோயாளியை விசாரிக்கச் சென்றால் அல்லது மார்க்கச் சகோதரனைச் சந்திக்கச் சென்றால் - மலக்குமார்களில்- அழைப்பவர் அவரை அழைத்து நீ மிகச் சிறந்த காரியம் செய்தாய்! மிகச் சிறந்த செயலுக்காக அடியெடுத்து வைத்துள்ளாய்! மேலும் சொர்க்கத்தில் உனக்கென ஒரு வீட்டை ஏற்படுத்திக் கொண்டாய்! என்று கூறுவார் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

*(அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி), ஆதாரம்: இப்னுமாஜா, திர்மிதி)*

# தேர்ந்தெடுக்கப்பட்ட சில பிரார்த்தனைகள்

-அபூ அப்துர் ரஹ்மான்(மக்கீ)

1. யா அல்லாஹ்! எனது மார்க்கத்திலும் எனது உலக வாழ்விலும் எனது குடும்பத்திலும் எனது செல்வத்திலும் மன்னிப்பையும் நலனையும் நான் உன்னிடம் கேட்கின்றேன். யாஅல்லாஹ்! என்னுடைய குறைகளை மறைப்பாயாக! யாஅல்லாஹ்! என் அச்சங்களை அகற்றி எனக்கு அமைதியைத் தருவாயாக! யாஅல்லாஹ்! எனக்கு முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் எனது வலதுபுறமிருந்தும் இடதுபுறமிருந்தும் எனக்கு மேலிருந்தும் எனக்குப் பாதுகாப்பு அளிப்பாயாக! எனக்கு கீழ்புறத்திலிருந்து நான் எதிர்பாராத விதமாகக் கொல்லப்படுவதை உன் நவல்லமையைக் கொண்டு நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

2. யாஅல்லாஹ்! எனது உடலில் நலனை (ஆரோக்கியத்தை)த் தந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! எனது செவிப்புலனில் நலனை (ஆரோக்கியத்தை)த் தந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! எனது பார்வையில் நலனை (ஆரோக்கியத்தை)த் தந்தருள்வாயாக! யாஅல்லாஹ்! வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வாகிய உன்னைத் தவிர (வேறு) யாருமே இல்லை. இறைநிராகரிப்பை விட்டும் வறுமையை விட்டும் மண்ணறையின் வேதனையை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

வணக்கத்திற்குரிய இறைவன் உன்னைத்தவிர (வேறு) யாருமில்லை. யாஅல்லாஹ்! நீயே என் இரட்சகன்! உன்னைத் தவிர வணங்குவதற்குரியவன் வேறு யாருமில்லை. நீயே என்னைப் படைத்தாய் நான் உன்னுடைய அடிமை நான் என்னால் முடிந்த அளவுக்கு உனது உடன்படிக்கை மற்றும் வாக்குறுதியின் மீது நிலைத்திருக்கிறேன்.

யாஅல்லாஹ்! எங்களின் பாவங்களை நீ மன்னிக்காமல் விட்டுவிடாதே! குறைகளை மறைக்காமல் விட்டுவிடாதே! கவலையைப் போக்காமல் விட்டுவிடாதே! கடனை அடைக்காமல் விட்டுவிடாதே! அருளாளர்களுக்கெல்லாம் அருளாளனே! உலக மற்றும் மறுமையின் தேவைகளில் அதில் உனக்கு பொருத்தமும் எங்களுக்கு வெற்றியுமுள்ள எத்தேவைகளையும் எங்களுக்கு நிறைவேற்றாமல் விட்டுவிடாதே!

நான் செய்த சகல தீமையைவிட்டும் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். நீ எனக்களித்த அருட்கொடைகளைக் கொண்டு உன்பக்கமே நான் மீளுகிறேன். இன்னும் என்னுடைய பாவங்களை (மனமாற) ஒப்புக் கொள்கிறேன். எனவே என்னை நீ மன்னித்தருள்வாயாக! உன்னைத் தவிர வேறு யாரும் பாவங்களை மன்னிக்க முடியாது. யாஅல்லாஹ்! கவலையிலிருந்து (துயரத்திலிருந்து) நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். இன்னும் இயலாமை மற்றும் சோம்பேறித்தனத்திலிருந்தும் நான் பாதுகாவல் தேடுகின்றேன்.

இன்னும் கடன் அதிகரிப்பதிலிருந்தும் மனிதர்களின் அடக்குமுறையிலிருந்தும் நான் பாதுகாவல் தேடுகின்றேன். யாஅல்லாஹ்! இந்த நாளின் ஆரம்பத்தைச் சீர்திருத்தம் உள்ளதாகவும் அதன் நடுவை வெற்றியுள்ளதாகவும் அதன் கடைசியை லாபம் உள்ளதாகவும் ஆக்கியருள்வாயாக! அருளாளர்களுக்கெல்லாம் அருளாளனே! ஈருலக நலவையும் நான் உன்னிடம் கேட்கின்றேன்.

3. விதியை பொருத்தத்துடன் ஏற்றுக் கொள்ளும் தன்மையையும் மரணத்திற்குப் பின் குளிர்ந்த (சுவர்க்க) வாழ்வையும், வழிகேட்டின் குழப்பத்திலும் தீய விளைவைத்தரும் செயலிலும் ஈடுபட்டுவிடாது உன்னைச் சந்திப்பதின் ஆசையையும் உன் திருமுகத்தைப் பார்ப்பதில் அடையும் இன்பத்தையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன்.

**நான் யாருக்கும் அநியாயம் செய்வதிலிருந்தும் அல்லது யாராவது எனக்கு அநியாயம் செய்வதிலிருந்தும் அல்லது நான் அத்துமீறுவதிலிருந்தும் அல்லது யாராவது என்மீது அத்துமீறுவதிலிருந்தும் அல்லது நீ மன்னிக்காத தவறு மற்றும் பாவங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.**

4. மிக நீளமான வயது வரை உயிர் வாழ்வதிலிருந்து உன்னிடம் நான் பாதுகாவல் தேடுகின்றேன். நல்ல அமல்கள் மற்றும் நற்குணங்களின் பக்கம் எனக்கு நீ நேர்வழி காட்டுவாயாக! அந்த நல் அமல்கள் மற்றும் நற்குணங்களின் பக்கம் உன்னைத் தவிர வேறு யாரும் நேர்வழி காட்டமுடியாது! கெட்ட செயல்கள் மற்றும் கெட்ட குணங்களிலிருந்தும் என்னைத் திருப்பிவிடுவாயாக! அப்படிப்பட்ட கெட்ட அமல்கள் மற்றும் கெட்ட குணங்களிலிருந்து உன்னைத்தவிர யாரும் என்னைத்திருப்ப முடியாது!

5. யாஅல்லாஹ்! என் மார்க்கத்தை எனக்கு நீ சீர்படுத்துவாயாக! என் வீட்டை எனக்கு நீ விஸ்தீரணப்படுத்துவாயாக! என் உணவில் நீ அருள்புரிவாயாக! கல் நெஞ்சம், பொடுபோக்கு மற்றும் ஏழ்மையிலிருந்தும் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன்.

இன்னும் இறைநிராகரிப்பு பாவச்செயல் பிரிவை ஏற்படுத்துதல் மற்றும் பிறர் பார்க்க வேண்டும் கேட்க வேண்டும் என்ற முகஸ்துதியிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். செவிடு, குருடு, உறுப்புக்கள் அழுகிவிடும் நோய் இன்னும் கெட்ட (எல்லா) நோய்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

6. யாஅல்லாஹ்! என் மார்க்கத்தை எனக்கு நீ சீர்படுத்துவாயாக! என் வீட்டை எனக்கு நீ விஸ்தீரணப்படுத்துவாயாக! என் உணவில் நீ அருள்புரிவாயாக! கல் நெஞ்சம், பொடுபோக்கு மற்றும் ஏழ்மையிலிருந்தும் நான் பாதுகாப்புத் தேடுகின்றேன். இன்னும் இறைநிராகரிப்பு பாவச்செயல் பிரிவை ஏற்படுத்துதல் மற்றும் பிறர் பார்க்க வேண்டும் கேட்க வேண்டும் என்ற முகஸ்துதியிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். செவிடு, குருடு, உறுப்புக்கள் அழுகிவிடும் நோய் இன்னும் கெட்ட (எல்லா) நோய்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

7. யாஅல்லாஹ்! என் உள்ளத்தில் இறையச்சத்தை ஏற்படுத்துவாயாக! அதனைத் தூய்மைப் படுத்துவாயாக!

நீயே அதைத் தூய்மைப் படுத்துபவர்களில் மிகச் சிறந்தவன்! அதனுடைய பொறுப்பாளனும், தலைவனும் நீயே! பிரயோஜனம் இல்லாத அறிவு, பயப்படாத உள்ளம், திருப்தியடையாத மனம் மற்றும் ஏற்றுக் கொள்ளப்படாத பிரார்த்தனையிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

8. யாஅல்லாஹ்! நான் செய்த மற்றும் செய்யாத கெட்ட செயல்களிலிருந்து உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். யாஅல்லாஹ்! உன் அருட்கொடைகள் (என்னைவிட்டு) நீங்குவதை விட்டும், நீ (எனக்கு) அளித்த ஆரோக்கியத்தன்மை (என்னை விட்டு) மாறுவதை விட்டும், உனது திடீர் தண்டனையை விட்டும், உன்னுடைய சகல கோபங்களை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.

**9. யாஅல்லாஹ்! இடிந்து விழுந்தோ, உயரத்திலிருந்து கீழே விழுந்தோ, மூழ்கியோ, எரிந்தோ இறப்பதை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். மரண நேரத்தில் ஷைத்தான் என்னைத் தீண்டுவதை விட்டும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். (விஷ ஜந்துக்களால்) கொட்டப்பட்டு இறப்பதை விட்டும் நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். உள்ளத்தில் முத்திரையிடப்படும் அளவுக்கு பேராசை ஏற்படுவதிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.**

**10. யா அல்லாஹ்! கெட்ட நோய்கள், கெட்ட ஆசைகள், கெட்ட செயல்கள் இன்னும் வெறுக்கத்தக்க குணங்களிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். இன்னும் கடன்கள் அதிகரிப்பதிலிருந்தும், மனிதர்களின் ஆதிக்கத்திலிருந்தும், விரோதிகளின் கேலி கிண்டல்களிலிருந்தும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன்.**

11. யாஅல்லாஹ்! என்னுடைய மார்க்கத்தை எனக்கு நீ சீர்படுத்துவாயாக! (ஏனெனில்) அதுதான் எனது அரண். எனது உலகை எனக்கு சீர்படுத்துவாயாக! (ஏனெனில்) அதுதான் நான் வாழுமிடம். எனது மறுமையை சீர்படுத்துவாயாக! (ஏனெனில்) அதுதான் நான் திரும்பிச் செல்லுமிடம். எனது வாழ்க்கையில் அதிக நன்மைகள் புரிவதற்கு வாய்ப்பளிப்பாயாக! அனைத்து தீமைகளை விட்டும் விடுபட்டதாக எனது மரணத்தை ஆக்குவாயாக! யாஅல்லாஹ்! எனக்கு நீ உதவியாக இருப்பாயாக! எனக்கு எதிராக இருக்காதே! எனக்கு நீ உதவி செய்வாயாக! எனக்கு எதிராக உதவி செய்யாதே! எனக்கு நேர்வழி காட்டுவாயாக! நேர்வழி பெறும் வழியை எனக்கு இலகுபடுத்துவாயாக!.

12.யா அல்லாஹ்! உன்னை அதிகம் ஞாபகம் செய்யக்கூடியவராகவும், உனக்கு மிகவும் நன்றி செலுத்தக்கூடியவராகவும், உனக்கு அதிகம் வழிபடுபவராகவும், கட்டுப்படுபவராகவும், அடிபணிபவராகவும் என்னை ஆக்கியருள்வாயக! என் தவ்பாவை ஏற்றுக் கொள்வாயாக! என் பாவத்தைப் போக்கி விடுவாயாக! என் பிரார்த்தனையை ஏற்றுக் கொள்வாயாக! எனக்குரிய ஆதாரத்தை உறுதிப்படுத்துவாயாக! என் உள்ளத்திற்கு நேர்வழி காட்டுவாயாக! என் நாவை பலப்படுத்துவாயாக! என் உள்ளத்தின் கசடுகளை அகற்றிவிடுவாயாக!.

13.யாஅல்லாஹ்! (சகல) காரியங்களிலும் நிலைத்திருப்பதையும், நேர்வழியில் உறுதியையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன். இன்னும் உன் அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்திடவும் உன்னை அழகிய முறையில் வணங்கிடவும் நான் உன்னிடம் கேட்கின்றேன். தூய்மையான உள்ளத்தையும் உண்மை உரைக்கும் நாவையும் நான் உன்னிடம் கேட்கிறேன். உனக்குத் தெரிந்த நலவுகளைக் கேட்கின்றேன். உனக்குத் தெரிந்த (எல்லாப்) பாவங்களிலிருந்தும் நான் பாதுகாவல் தேடுகின்றேன். நீயே மறைவானவற்றை யெல்லாம் மிகவும் நன்றிந்தவன்!

14. யாஅல்லாஹ்! எனக்கு நேர்வழியைக் காட்டுவாயாக! என் ஆத்மாவின் கெடுதிகளிலிருந்து என்னைக் காத்தருள்வாயாக! நற்காரியங்களைச் செய்யவும் வெறுக்கத்தக்க காரியங்களை விட்டு ஏழைகளை நேசிக்கும் தன்மையையும் தந்து என் பாவங்களை மன்னித்து எனக்கு அருள்புரியும்படி நான் உன்னிடம் கேட்கின்றேன். உன் அடியார்களை குழப்பத்தில் ஆழ்த்த நீ விரும்பினால், குழப்பத்தில் ஆழ்த்தப்படாத நிலையிலேயே என்னை உன்னளவில் மரணிக்கச் செய்து விடுவாயாக!

15. யாஅல்லாஹ்! உன்னுடைய நேசத்தையும் உன்னை நேசிப்பவர்களின் நேசத்தையும் உன் நேசத்தின் பக்கம் என்னைச் சமீபமாக்கி வைக்கக்கூடிய எல்லா அமல்களின் நேசத்தைபும் நான் உன்னிடம் கேட்கின்றேன். யா அல்லாஹ்! சிறந்த கேள்வியையும் சிறந்த பிரார்த்தனையையும் சிறந்த வெற்றியையும் சிறந்த நன்மையையும் நான் உன்னிடம் கேட்கின்றேன். என்னை நீ உறுதிப்படுத்துவாயாக! என்னுடைய தராசியை (நன்மையால்) அதிக எடையுள்ளதாக ஆக்கியருள்வாயாக! என்னுடைய ஈமானை (நம்பிக்கையை) உறுதிப்படுத்துவாயாக! என் அந்தஸ்த்தை உயர்த்துவாயாக! என்னுடைய தொழுகையையும் இன்னும் (ஏனைய) வணக்கங்களையும் ஏற்றுக் கொள்வாயாக! என் பாவங்களை மன்னித்தருள்வாயாக! சுவர்க்கத்தில் உயர்ந்த அந்தஸ்துக்களை நான் உன்னிடம் கேட்கின்றேன்.

16. நன்மைகளின் ஆரம்பங்களையும் முடிவுகளையும் இன்னும் எல்லா நன்மைகளையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன். நன்மைகளின் ஆரம்ப, முடிவு, அதன் வெளிப்படை, அந்தரங்கம் மற்றும் சுவர்க்கத்தின் உயர்ந்த அந்தஸ்த்துக்களை நான் உன்னிடம் கேட்கின்றேன்.

17. யாஅல்லாஹ்! என்னுடைய அந்தஸ்தை உயர்த்துவதையும் என் பாவத்தை மன்னிப்பதையும் நீ என் உள்ளத்தைத் தூய்மைப்படுத்துவதையும் என் அபத்தை (கற்பை) பத்தினித் தனமாக்குவதையும் நீ என்னுடைய பாவங்களை மன்னிப்பதையும் நிச்சயம் நான் உன்னிடம் கேட்கின்றேன்.

**18. யாஅல்லாஹ்! என் பார்வையிலும், என் கேள்விப்புலனிலும், என் உடலமைப்பிலும், என் குணத்திலும், என் குடும்பத்திலும், என் உயிர்வாழ்விலும், என்னுடைய அமல்களிலும் நீ அருள்புரியும்படி நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். என்னுடைய நற்காரியங்களை நீ ஏற்றுக் கொள்வாயாக! சுவர்க்கத்தின் உயர்ந்த அந்தஸ்த்துக்களை நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன்.**

*-தொடர்ச்சி 10-ஆம் பக்கம் ....*

# ஆண்மைக்குறைவு மற்றும் பெண்மைக்குறைவு VS இரத்த அழுத்தம்

-டாக்டர் **A.** ஷேக் அலாவுதீன் **MD, (Alt. Med) ATCM (CHINA)**

(இந்தத் தொடரை படிக்கும் முன்பு ஹிஜ்ரி ஜமாத்துல் ஆகிர் மற்றும் ரஜப் 1426-ல் வெளியான தொடரைப் படித்து விட்டு தொடர்ந்தால் இன்னும் அதிகமான தெளிவைப் பெற்றுக் கொள்ளலாம். இன்ஷா அல்லாஹ்!)

உடலில் முக்கிய உறுப்புக்கள் அனைத்தும் சிறப்பாக சீராக இயங்குமானால் அது ஓர் ஆரோக்கியமான உடல். அதில் ஆண்மைக் குறைவு, பெண்மைக் குறைவு என்ற பேச்சுக்கே இடமில்லை. இறைவன் நாடியதைத் தவிர!

ஏதாவது ஒரு உறுப்பு பாதிக்கப்படும் போது தான் அதைச் சரி செய்வதற்காகத் தேவைப்படும் இரத்தப் பற்றாக்குறையை சரி செய்ய ஆண் பெண் பிறப்பு உறுப்புக்களுக்கும் மூளைக்கும் செல்லும், இரத்தம் திசை திருப்பப்படுகின்றது என்பதை முன்பே விளக்கியிருக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட உறுப்பு எது என்பதை நாடி பரிசோதனை மூலம் கண்டறிந்து அக்குபஞ்சர் சிகிச்சை மூலம் கண்டறிந்து அவ்வுறுப்பின் இயக்கத்தன்மையை சமநிலைப்படுத்தும் போது உடலில் இரத்த ஓட்டம் சீரான நிலையை அடைந்து தடைபட்டுப் போன ஆண் பெண் உறுப்புக்களுக்கும் செல்ல ஆரம்பித்து இயல்பு நிலையை அடைகின்றது. இதனால் பிறப்புக்கள் தன் இயற்கை தன்மையுடன் செயல்பட முடிகின்றது.

இவ்வாறு முறையாக சரி செய்யாமல் ஓர் உறுப்பின் பிரச்சினையைத் தீர்க்க செல்லும் இரத்த ஓட்டத்தை மாத்திரைகள் கொடுத்து தடுப்பது பாதிக்கப்பட்ட உறுப்பை மேலும் கேடாக்கி, இதயத்துடன் இயக்கத்தில் தலையீடு செய்து அதன் வலிமையை குறைத்து, ஆண்-பெண் பிறப்புறுப்புக்களின் இயக்கத்தையே நாசம் செய்யும்.

இது போன்ற நேரங்களில் ஒருவருடைய ஆண் உறுப்பில் கோளாறு ஏற்படவே செய்யும். ஆண்மையின்மை, விறைப்புத் தன்மை குறைவு, விறைப்பு இன்மை, விரைவில் விந்து வெளியேறுதல், ஆண் பெண் உறுப்பில் பருமன் குறைதல் போன்றவைகள் உண்டாகும்.

எந்த ஓர் ஆண் முழங்காலில் வலியையும் வீக்கத்தையும் உணர்கின்றானோ அது அவனுடைய பாலின உறுப்புக்களின் பலவீனத்தை உறுதி செய்கின்றது.

பெண்களாயிருந்தால் இந்த முழங்கால் வலி வீக்கம் அவர்களின் கர்ப்பப்பை, சினைப்பை வலுவிழந்து வருவதையும் பிறப்புறுப்பு அதன் இயற்கைத் தன்மையில் குறைவு உண்டாகின்றது என்பதையும் தெளிவுபடுத்துகின்றது. சிறுநீரகங்களின் பலவீனம் எப்போதும் பிரதிபலிப்பது முழங்கால் மூட்டுகளில் தான். பெண்மைக் குறைவு **(Frigidity)**, உச்சநிலைக் கோளாறு **(Orgasmil Dysfunction)**, அவசர உச்சநிலை **(Rapid Orgasm)** போன்றவைகள் இவர்களுக்குப் படிப்படியாக ஏற்பட வாய்ப்பாகி விடும்.

இது போன்ற பிரச்சினைகளை பெண்கள் வெளிப்படுத்துவதில்லை. கணவர்களுக்கும் இது பற்றிய போதிய விபரம் இல்லாததால் இதை கவனிக்காமல் விட்டு விடுகின்றார்கள். கணவனின் விருப்பத்திற்காகவே இல்லற வாழ்வில் ஈடுபடும் அளவுக்கு இவர்களின் மனநிலை மாறி விடும். இவர்களுக்கு விருப்பம் இல்லாவிட்டாலும் கணவனின் விருப்பத்திற்கு கட்டுப்படுவதன் நோக்கம் கணவன் திசை மாறிப் போய்விடக் கூடாது என்பதே.

தோற்றமும் வனப்பும் இருந்தும் இவர்கள் நடைபிணமாய் வாழ்வில் ஆர்வமில்லாமல் இருப்பார்கள். இந்த பிரச்சினைகளைப் பற்றி நாம் பல நூறு பக்கம் எழுதலாம். ஆனால் நமக்கு இப்போது தேவை நோயின் விபரங்கள் அல்ல. அதற்கான தீர்வுகளே! எனவே தீர்வுகளை நாம் தெளிவுபடுத்திக் கொள்வோம்.

ஒரு உறுப்பு பாதிக்கப்படும் போதே பாலின உறுப்புக்களுக்குச் செல்லும் இரத்தம் தடைபட்டு ஆண் பெண் பிறப்புறுப்புக்களில் கோளாறு உருவாகின்றது என்றால் பல உறுப்புக்கள் பாதிக்கப்பட்டால் என்னவாகும்? சந்தேகம் வேண்டாம். இல்லற வாழ்க்கை இவர்களுக்கு அர்த்தமற்றதாகப் போய் விடும்.

சரியான உதாரணமாக இதற்கு இரத்த அழுத்த மாத்திரை சாப்பிடுபவர்களை எடுத்துக் கொள்ளலாம். ஏதோ ஒரு உறுப்பு பாதிக்கப்பட்டால் அதை சரி செய்ய விரைவாகச் சென்ற இரத்த ஓட்டத்தை நோய் என்று எண்ணி நவீன மருத்துவத்தின் ஆலோசனைப்படி மாத்திரை சாப்பிட்டு இரத்த ஓட்டத்தை தடை செய்து அதன் மூலம் படிப்படியாக ஒவ்வொரு உறுப்பாக பாதிப்படையை இவரும் மருத்துவரின் ஆலோசனைப்படி மாத்திரைகளை அதிகப்படுத்தி சாப்பிட்டுக் கொண்டே வர விளைவு. இரத்த அழுத்தம் இரத்த கொதிப்பாக மாறும். மேலும் பல வியாதிகள் சேர்ந்திருக்கும் இதயம் மோசமாக பலவீனப்பட்டு போயிருக்கும் அத்துடன் அவரின் ஆண் உறுப்பு வெறும் சிறுநீர் கழிக்க உதவும் பாதையாக மட்டுமே செயல்பட்டுக் கொண்டிருக்கும்.

இரத்த அழுத்த மாத்திரை தொடர்ந்து சாப்பிடுபவர்களின் நிலைமை இறுதியில் இதுதான். ஆண் உறுப்பு பெயருக்கு இருக்குமே தவிர சிறுநீர் கழிப்பதை தவிர வேறு எதற்கும் பயன்படாத நிலைமை உருவாகிவிடும். ஆண் உறுப்பு சிறுத்து விடும். வாழ்க்கையின் அழகிய அர்த்தங்கள் தொலைந்து விடும்.

மருத்துவமனையில் என்னிடம் இது போன்றவர்கள் வந்து கண் கலங்க பேசும் போது நம் மனம் பரிதவிக்கவே செய்கின்றது. அறியாமையினால் மாத்திரைகள் சாப்பிட்டு நன்மை செய்ய உண்டான இரத்த அழுத்தத்தை தடுத்து நிறுத்தியதன் விளைவு இன்று வாழ்வில் வசந்தங்கள் பல விடை பெற்று விட்டன.

எனக்கு இரத்த அழுத்தம் இரத்த கொதிப்பு இல்லை. அதற்கான மாத்திரைகளும் சாப்பிடவில்லை. பிறகு எனக்கு எப்படி ஆண்மைக் குறைவு ஏற்பட்டது என்று சிலர் கேட்கலாம். அதற்கான விடை இது தான்.

உடல் உறுப்புக்கள் ஒன்றோ அதற்கு மேற்பட்டதோ பாதிக்கப்படும் போது ஆண்மைக் கோளாறு ஏற்படவே செய்யும். உடல் உறுப்புக்கள் பாதிக்கப்பட்டால், சம்பந்தப்பட்ட உறுப்பு சரியாகும் வரை இரத்த அழுத்தம் ஏற்படவே செய்யும். சிலருக்கு அப்படி இரத்த அழுத்தம் ஏற்படாவிட்டால் நாம் சிகிச்சை மேற்கொண்டு அதை சரி செய்ய வேண்டும். உடல் உறுப்புக்களின் பாதிப்பு இரத்த அழுத்த மாத்திரை சாப்பிட்டதினாலும் ஏற்படலாம். சக்தி சமநிலை மாறுபாட்டால் உடல் உறுப்புக்கள் பாதிக்கப்படும் போதும் ஏற்படலாம். ஆனால் இரத்த அழுத்த மாத்திரைகளோ

அல்லது வேறு மாத்திரைகளோ ஏற்படுத்திய ஆண்மை மற்றும் பெண்மைக் கோளாறுகளே தற்போதைய காலகட்டத்தில் அதிகம்.

**இதற்குத் தீர்வு தான் என்ன?**

அக்குபஞ்சர் மருத்துவம் அழகாக வழிகாட்டுகின்றது. நாடி பரிசோதனை முறையில் பாதிக்கப்பட்ட உறுப்புக்களை வரிசை முறைப்படி கண்டறிந்து சீர்படுத்தி உடலில் ஆண்மை வீறு கொள்கின்றது. மடிந்த பெண்மை மலருகின்றது. எந்தவித பக்க விளைவுகள் இல்லாமல், மருந்து மாத்திரைகள் என்ற இரசாயனத்தை உட்கொள்ளாமல், பரிசோதனைகள் என்ற ஏமாற்று வித்தைகளுக்கு உட்படாமல் பல வருடங்களுக்கு முன்னிருந்த நிலைமையை மீண்டும் கொண்டு வருகின்றது. இன்ஷா அல்லாஹ்!

இந்த முறையில் அணுகாமல் செயற்கையான தூண்டுதலை தரும் மருந்துகள், மாத்திரைகள், களிம்புகள் என்று நாடினால் அது விபரீதத்தில் போய் உயிருக்கே ஆபத்தில் போய் முடியும் வாய்ப்பை உருவாக்கும். உதாரணமாக, வயக்ரா என்ற செயற்கையாக ஆணுறுப்பை விறைப்படையச் செய்யும் மாத்திரைகளை எடுத்துக் கொள்ளலாம்.

உறுப்புக்கள் பாதிக்கப்பட்ட நிலையிலேயே இரத்த ஓட்டம் பிறப்புறுப்புக்களுக்குச் செல்லாமல் பாதிக்கப்பட்ட உறுப்புக்களைச் சரி செய்ய விரைந்து செல்கின்றது. இந்த செயற்கைத் தூண்டுதல் மாத்திரைகள் சாப்பிடும் போது நிர்ப்பந்தமாக இரத்தம் பிறப்புறுப்புக்களுக்கு திருப்பப்படுகின்றது. இதனால் ஏற்கனவே பாதிப்படைந்த உறுப்பு மேலும் பாதிப்படைகின்றது.

ஆஸ்துமா என்ற நுரையீரல் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அவருடைய நுரையீரலைச் சரி செய்ய இரத்த ஓட்டம் அதிகம் சென்று கொண்டிருக்கும். அந்த நேரத்தில் செயற்கையாகத் தூண்டக் கூடிய மாத்திரைகளைச் சாப்பிட்டால் நிர்ப்பந்தமாக நுரையீரலுக்குச் செல்லும் இரத்தம் ஆணுறுப்பு விறைப்புத் தன்மைக்காக திருப்பி அனுப்பப்படுகின்றது. இதனால் அவரது உடல் வேட்கை தணிந்தாலும், அவருடைய நுரையீரல் முன்பை விட மோசமாக பாதிப்படைந்து நுரையீரல் நோய்கள் அதிகமாகின்றன. இது போன்றே இதயம் பலவீனம் உள்ளவர் - இதய நோய்களாலும், வயிறு பாதிக்கப்பட்டவர் - வயிற்றுப் புண் போன்ற நோய்களாலும், சிறுநீரக பலவீனம் உள்ளவர் - மூட்டுவலி போன்ற நோய்களாலும் படிப்படியாக பாதிக்கப்பட்டு பிறகு தீவிர நோய் அவஸ்தைக்கு உள்ளாகின்றார். வயக்ரா போன்ற மிக மோசமான மாத்திரைகள் சாப்பிடும் போது உடல் உறுப்பு பாதிப்பு அதிகம் இருந்தால் மரணம் ஏற்படலாம்.

காதல் மோகம் என்பது இயற்கையான சூழலில் எதார்த்தமாக ஏற்படும் போது நம் உடலில் **(CGmp)** இரசாயன திரவம் உற்பத்தியாகி ஆண் உறுப்பு விறைப்பு தன்மையை கொடுக்கின்றது. இந்த சூழ்நிலையில் உடலில் பல உறுப்புக்களிலிருந்தும் சக்தி (இரத்தம்) உறிஞ்சப்படுகின்றது. இது நீண்ட நேரம் நடைபெற்றால் உடல் நிலை மிகவும் மோசமாகும் என்பதால் **(pd5)** என்ற மற்றொரு இரசாயன திரவம் சுரந்து, அந்த விறைப்புத் தன்மையை செயலிழக்கச் செய்கின்றது, இதற்கு இடைப்பட்ட நேரத்தில் தான் இல்லற இன்பம் நிறைவடைகின்றது.

இவ்வாறு இல்லாமல் வயக்ரா போன்ற செயற்கை ஆண் உறுப்பு தூண்டுதல் மாத்திரைகள் சாப்பிடும் போது **pd5** என்ற விறைப்புத் தன்மையைச் செயலிழக்கச் செய்யும் திரவத்தை அழித்து விடுகின்றது. இதனால் **cGmp** என்ற ஆண் உறுப்பை விறைப்படையச் செய்யும் திரவம் மட்டுமே இருந்து செயல்படுவதால், விறைப்புத் தன்மை நீடிக்கின்றது. உடலுறவு முடிந்த பிறகும் விறைப்பு தன்மை தொடருகின்றது. சிலருக்கு உடலுறவு முடிந்ததா இல்லையா என்று கூடத் தெரியாமல் போய் விடுகின்றது.

விளைவு உள் உறுப்புக்கள் பலமாக அதிர்வடைந்து ஏற்கனவே பாதிக்கப்பட்ட உறுப்புக்கள் மேலும் கடுமையாக பாதிப்படைகின்றன. பலர் உயிர் இழந்ததன் விபரம் தற்போது உங்களுக்கு புரிந்திருக்க வேண்டும்!?

**pd5** என்ற இரசாயன திரவம் சுரப்பதே நமக்கு சுகத்தையும் தந்து உடல் உறுப்புக்களையும் பாதுகாப்பதற்கே. அதையே நாம் அறியாமையினால் நாசம் செய்தால்?

இது போன்ற நிலை நீடிக்கும் போது புரோஸ்டேட் சுரப்பி வீக்கத்திற்குள்ளாகின்றது. இதுவே எதிர்காலத்தில் புரோஸ்டெட் புற்றுநோய்க்கு வழி வகுக்கும்.

இயற்கையான முறையில் உடல் ஆரோக்கியத்தைக் கட்டிக் காக்கும் போது உண்மையான சந்தோஷத்தை வாழ்வில் நாம் சந்திக்க முடியும். இயற்கையான முறையில் உடலை சீரமைப்பு செய்து இழந்த ஆண்மையையும் இழந்த பெண்மையையும் மீண்டும் மலரச் செய்வதில் 5000 வருடங்களுக்கு முற்பட்ட சீன மருத்துவமான அக்குபஞ்சர் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது. காரணம் அக்குபஞ்சர் நோய் நாடி நோய் முதல் நாடி என்னும் தத்துவத்தில் செயல்படுகின்றது. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட நோய்களுக்கும் இனி கண்பிடிக்கப் போகும் நோய்களுக்கும் அக்குபஞ்சர் சிகிச்சை முறையில் அழகிய தீர்வு உண்டென்றால் அது மிகையல்ல.

இன்ஷா அல்லாஹ் மீண்டும் சந்திப்போம்..!


# மாபெரும் அறிவுப் போட்டி

## திருமறையைத் திறந்து பாருங்கள்

அன்பிற்குரிய சுவனப்பாதை வாசகர்களே.. “சுவனப்பாதை” மாத இதழ் முதலாம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடைபெறும் அறிவுப் போட்டிதான் “திருமறையைத் திறந்து பாருங்கள்”

– மொபைல் போன்கள், வாட்ச் போன்ற சிறப்புப் பரிசுகள்.
– உங்கள் திறமைக்குச் சவால் விடும் கேள்விகள்.
– போட்டிக்கான விபரம் மற்றும் கேள்விகள் இந்த இதழோடு கேட்டுப் பெறுங்கள்.

இன்ஷா அல்லாஹ் வெற்றி உங்களது ஆகட்டும்.

*7-ஆம் பக்கத் தொடர்ச்சி...(தேர்ந்தெடுக்க...)*

19. யாஅல்லாஹ்! கஷ்டங்கள் ஆட்கொள்வதை விட்டும், விரும்பத்தகாதவை ஏற்படுவதை விட்டும் தீய முடிவுகளை விட்டும் விரோதிகளின் கேலி கிண்டல்களை விட்டும் நிச்சயமாக நான் உன்னிடம் பாதுகாப்புத் தேடுகின்றேன். உள்ளங்களை புரட்டக்கூடிய அல்லாஹ்வே! உன் மார்க்கத்தின் மீது என் உள்ளத்தை உறுதிப்படுத்துவாயாக! உள்ளங்களை திருப்பக்கூடிய அல்லாஹ்வே! உனக்கு வழிபடுவதின் மீது என் உள்ளத்தை திருப்பி விடுவாயாக!.

20. யாஅல்லாஹ்! (உன் அருட்கொடைகளை) எங்களுக்கு அதிகப்படுத்துவாயாக! எங்களுக்குக் குறைத்துவிடாதே! எங்களை கண்ணியப்படுத்துவாயாக! இழிவு படுத்திவிடாதே! (உனது அருட்கொடைகளை) எங்களுக்குத் தந்தருள்வாயாக! உன் அருளிலிருந்து எங்களை நிராசையற்றவர்களாக ஆக்கிவிடாதே! யாஅல்லாஹ்! எங்களின் எல்லாக் காரியங்களின் முடிவையும் நன்மையாக ஆக்கி வைப்பாயாக! இவ்வுலகின் இழிவை விட்டும் மறுவுலகின் வேதனையை விட்டும் எங்களைப் பாதுகாப்பாயாக!

21. யாஅல்லாஹ்! உனக்கு மாறு செய்வதை விட்டும் எங்களை தடுக்கக்கூடிய (உன்னைப்பற்றிய) அச்சத்தையும், உன்னுடைய சுவர்க்கத்தைப் பெற்றுத் தரும் வழிபாட்டையும், உலகச் சோதனைகளை எளிதாகக் கருதச் செய்யும் உறுதியையும் எங்களுக்குத் தந்தருள்வாயாக! யா அல்லாஹ்! எங்களுடைய செவிப்புலன்களையும், பார்வைகளையும் (உடல்) சக்திகளையும் நீ எங்களை வாழ வைக்கும் காலமெல்லாம் (குறைவின்றி) இயங்கச் செய்வாயாக! அதனை எங்கள் வாரிசுகளுக்கும் (சந்ததிகளுக்கும்) ஆக்குவாயாக! எங்களுக்கு அநீதம் செய்தவர்களைப் பழி வாங்குவாயாக! எங்கள்மீது விரோதம் கொண்டவர்களுக்குப் பாதகமாக எங்களுக்கு நீ உதவி செய்வாயாக! இவ்வுலகையே எங்கள் நோக்கமாகவும் எங்கள் அறிவின் எல்லையாகவும் ஆக்கிவிடாதே! எங்களுடைய மார்க்கத்தில் எங்களுக்கு சோதனைகளை ஏற்படுத்திவிடாதே! எங்களின் பாவங்களினால் எங்கள்மீது இரக்கம் காட்டாத, உன்னை பயப்படாதவனை எங்கள் மீது பொறுப்பாளியாக ஆக்கிவிடாதே!

**22. யாஅல்லாஹ்! உனது அருளைப் பெற்றுத்தரும் செயல்களையும், உனது மன்னிப்பில் உறுதி கொள்ளும் நிலையையும் அனைத்து நல்லறங்களின் பிரதிபலன்களையும் அனைத்து பாவங்களைவிட்டும் பாதுகாப்பையும் சுவர்க்கத்தைப் பெற்று வெற்றி பெற, நரகை விட்டும் ஈடேற்றம் பெற (அருள் புரியுமாறும்) நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன்.**

23. யாஅல்லாஹ்! எங்களின் பாவங்களை நீ மன்னிக்காமல் விட்டுவிடாதே! குறைகளை மறைக்காமல் விட்டுவிடாதே! கவலையைப் போக்காமல் விட்டுவிடாதே! கடனை அடைக்காமல் விட்டுவிடாதே! அருளாளர்களுக்கெல்லாம் அருளாளனே! உலக மற்றும் மறுமையின் தேவைகளில் அதில் உனக்கு பொருத்தமும் எங்களுக்கு வெற்றியுமுள்ள எத்தேவைகளையும் எங்களுக்கு நிறைவேற்றாமல் விட்டுவிடாதே!

24. யாஅல்லாஹ்! உன்னிடமிருந்து அருளை நிச்சயமாக நான் கேட்கின்றேன். அதனைக் கொண்டே என் உள்ளத்திற்கு நீ நேர்வழி காட்டுகின்றாய். என் காரியங்கள் அனைத்தையும் அதனைக் கொண்டே நீ ஒன்று சேர்க்கின்றாய். என்னுடைய பிரிவினையை அதைக் கொண்டே நீ சீர்படுத்துகின்றாய். என்னுடைய மறைவான விஷயங்களை அதைக்கொண்டே நீ பாதுகாக்கின்றாய். என்னுடைய வெளிப்படையானவைகளையும் அதைக் கொண்டே நீ உயர்த்துகின்றாய் அதைக் கொண்டே என்னுடைய அமல்களையும் நீ தூய்மையாக்குகின்றாய். அதைக் கொண்டே எனக்கு நேர்வழியையும் நீ காட்டுகின்றாய். அதைக் கொண்டே குழப்பங்களை என்னைவிட்டும் நீ அகற்றுகின்றாய். அதைக் கொண்டே எல்லாக் கெடுதிகளிலிருந்தும் நீ என்னைப் பாதுகாப்பாயே அப்படிப்பட்ட அருளை நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன்.

25. யாஅல்லாஹ்! தீர்ப்பு நாளில் வெற்றியையும் நற்பாக்கியம் உள்ளவர்களின் வாழ்க்கையையும் ஷுஹதாக்களின் அந்தஸ்தையும் நபிமார்களுடன் இருப்பதையும் எதிரிகளுக்கு எதிராக எனக்கு உதவி கிடைப்பதையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன்.

26. யாஅல்லாஹ்! ஈமானில் உறுதியையும் நல்லொழுக்கத்தில் உறுதியையும் வெற்றியைப் பின் தொடரும் லாபத்தையும் உன்னிடமிருந்து அருளையும் நற்பாக்கியங்களையும் பிழை பொறுப்பையும் திருப்பொருத்தத்தையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன்.

**27. யாஅல்லாஹ்! ஆரோக்கியத்தையும் பத்தினித் தனத்தையும் நல்லொழுக்கத்தையும் விதியை ஏற்றுக் கொள்ளும் தன்மையையும் நிச்சயமாக நான் உன்னிடம் கேட்கின்றேன். யாஅல்லாஹ்! என் ஆத்மாவின் கெடுதியிலிருந்தும் இன்னும் உன் ஆதிக்கத்திலுள்ள ஒவ்வொரு மிருகத்தின் கெடுதியிலிருந்தும் நான் உன்னிடம் பாதுகாவல் தேடுகின்றேன். நிச்சயமாக என் இறைவன் நேரான வழியில் இருக்கின்றான்.**

28. யாஅல்லாஹ்! என் பேச்சை நீ கேட்கின்றாய். என் நிலையினை நீ பார்க்கின்றாய். என் இரகசியத்தையும் பரம ரகசியத்தையும் நீ அறிந்திருக்கின்றாய். என் காரியத்தில் எதுவும் உன்னிடம் மறைந்ததாக இல்லை! நான் ஒன்றுமில்லாத ஏழை! இரட்சிப்புத் தேடுபவன்! அபயம் தேடுபவன்! இரக்கத் தன்மையுள்ள, இளகிய உள்ளமுள்ள, செய்த பாவங்களை மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்பவன், மிஸ்கீனின் (ஏழையின்) வேண்டுகோளாக உன்னிடம் வேண்டுகிறேன்.

பணிந்த நிலையில் மண்டிடும் பாவியின் மன்றாடுதலாக மன்றாடுகின்றேன். உள்ளம் பயந்த நிலையில் பிரார்த்திப்பவரின் பிரார்த்தனையாக நான் உன்னிடம் பிரார்த்திக்கின்றேன். பிடரியைப் பணியவைத்து, உடம்பையும் பணியவைத்து, மூக்கையும் (முகத்தையும்) மண்ணில் படியவைத்து பயந்த நிலையில் பிரார்த்திப்பவனின் பிரார்த்தனையாக நான் உன்னிடம் பிரார்த்திக்கின்றேன்.

وَصَلَّى اللهُ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلَّمَ.

அன்னாரின் குடும்பத்தார் மற்றும் தோழர்கள் மீதும் அல்லாஹ்வின் அருளும் கருணையும் உண்டாகட்டுமாக!- ஆமீன்.

# இராஜ நாகம் (King Cobra) & கீரிப்பிள்ளை(Mangoose)

*-அறிவியல் தொடர்-* **E. உஸ்மான் அலி**

ஒரு கிராம் நல்ல பாம்புடைய விஷம் 50-க்கும் மேற்பட்ட மனிதர்களை கொல்ல போதுமானதாகும். ஒரு முறை இவை கொட்டுவதனால் பிரயோகம் செய்யப்படும் விஷம் (ஏழு டன் எடைக் கொண்ட ) மிகப்பெரிய யானையையே சில மணித்துளிகளில் மரணிக்க செய்ய போதுமானதாகும். மற்றுமொரு அம்சம் முட்டையிலிருந்து வெளிவந்த சிறிய பாம்புடைய விஷம், வீரியம் மிக்கப் பெரிய பாம்பின் விஷத்தை போன்றே எந்த விதத்திலும் குறையாத வீரியம் மிக்கதாகும். ஆக முட்டையிலிருந்து வெளிவந்த குட்டிப் பாம்பு கூட மரணத்தை விளைவிக்கும் ஆற்றலுடன் தான் பிறக்கின்றது. இந்த அம்சம் கூட எல்லா உயிரினங்களிலும் வித்தியசமான விதிவிலக்கான அம்சமாகத் திகழ்கின்றது. தற்போது இதன் விஷத்தினுடைய வீரியத்தை நம்மால் விளங்கிக் கொள்ள முடிகின்றதல்லவா?

மற்றுமொரு அதிசய செய்தி ஆப்பிரிக்காவில் வசிக்கும் கருப்பு கழுத்துடைய (black necked cobra) நல்ல பாம்பு தன் எதிரியின் கண்களை நோக்கி விஷத்தை 2.5 மீட்டர் தொலைவு வரை பீய்ச்சி அடிக்கின்றது. இதனால் எதிரியின் கண்களில் தற்காலிகக் குருடும் கடுமையான வலியையும் ஏற்படுத்தி தப்பி விடுகின்றது. இவ்வாறு விஷத்தை துப்பாக்கியின் அமைப்பில் பீய்ச்சி அடிக்கும் இந்த விதிவிலக்கான அம்சம் கூட அல்லாஹ்வின் அத்தாட்சியே ஆகும்.

இவ்வளவு வீரியம் மிக்க இந்த பாம்பின் விஷத்தைத் தாங்கி இதனையே தோற்கடித்து உண்ணக்கூடிய சிறிய பாலூட்டியான கீரிப்பிள்ளையின் ஆற்றலை இப்போது விளங்கிக் கொள்ள வார்த்தை விரயம் தேவையில்லை.

நல்லப் பாம்புடைய வீரியம் மிக்க விஷத்தை தாங்கிக் கொள்ளக்கூடிய இந்த அம்சம்தான் மற்றவற்றிலிருந்து கீரிப்பிள்ளை வேறுபட்டு விளங்க காரணமாக அமைந்துவிடுகிறது.

அல்லாஹ் தான் நாடியவற்றிற்கு நம்மால் நம்ப முடியாத, நம் பகுத்தறிவால் விடைப் பகர முடியாத அளவிற்கு ஆற்றலை அதிகப்படுத்தக் கூடியவன். இறைவன் அனைத்தின் மீதும் ஆற்றல் நிறைந்தவன.

பொதுவாக கீரிப்பிள்ளையும் நல்லப் பாம்பும் ஒன்றை ஒன்று சந்தித்துக் கொண்டால் நீ உன் வழியில் செல் நான் என் வழியில் செல்லுகின்றேன், நமக்குள் எந்த பிரச்சினையும் வேண்டாம் என்ற ரீதியிலே ஒன்றை ஒன்று தவிர்த்துக் கொண்டு செல்கின்றன. சில சந்தர்ப்பங்களில் எதிரிகள் ஒன்றுடன் ஒன்று சண்டையில் மோதும் நிலை வந்துவிட்டாலோ அந்த போட்டியின் முடிவு, இறந்த பாம்பை கீரிப்பிள்ளை தின்னுவதாகத்தான் முடிவடையும்.

ஒரு எதிரியுடைய தன்மைகளையும் ஆற்றலையும் அறிந்துக் கொண்டால் அதைத் தோற்கடிக்கக்கூடிய ஒன்றின் ஆற்றலை அறிந்துக் கொள்ள நமக்கு அதிக சொற்றொடர்கள் தேவைப்படாது என்ற அடிப்படையில் நல்லப் பாம்பை பற்றியும் அதன் விஷத்தின் வீரியத்தை பற்றியும் முதலில் பார்த்தோம்.

கீரிப்பிள்ளையின் உடலை காயப்படுத்தி விஷத்தை பிரயோகம் செய்யக்கூடிய அளவிற்கான கூறியப் பற்கள் நல்லப் பாம்பிற்கு நிச்சயமாக இருக்கத்தான் செய்கின்றது. இருப்பினும் அந்த விஷத்தை தாங்கக் கூடிய உடலமைப்புத்தான் அல்லாஹ்வின் அத்தாட்சியை பறைச்சாற்றி நிற்கும் அம்சமாகும். கீரிப்பிள்ளை மனிதர்களுக்கு இன்னல் விளைவிக்கக் கூடிய எலி மற்றும் பாம்பை முக்கிய உணவாக உட்கொள்ளுவதால் மனிதர்களுக்கு ஒரு விதத்தில் நன்மைப் பயப்பினும் கூட மனிதர்களுக்கு பயன் தரத்தக்க உயிரினங்களை சில வேளைகளில் இவைத் தாக்குவதனால் இதனால் பாதிப்பு ஏற்படவும் செய்கின்றது.

இத்தகைய மேற்கண்ட எல்லா அம்சங்களையும் நம் இறைவன் தக்க காரண காரியங்களுடன் திட்டமிட்டுதான் படைத்துள்ளான் என்பதை சிந்திக்கும் போது அல்லாஹ்வுடைய அத்தாட்சிகள் அவனுடைய தீனில் நம்முடைய நிலைப்பாட்டை உறுதிப்படுத்துகின்றது. அலஹம்துலில்லாஹ். எல்லாப் புகழும் இறைவனுக்கே.

**வானங்களையும் மற்றும் பூமியையும் அவ்விரண்டிற்க்கும் இடைப்பட்டதையும் தக்க காரணத்துடனும், குறிப்பிட்ட காலக் கெடுவுடனும் தவிர நாம் படைக்கவில்லை. (நம்மை) மறுப்போர் தமக்கு எச்சரிக்கப்பட்டதைப் புறக்கணிக்கின்றனர். (அல்குர்ஆன் 26: 03)** ●

---

## கோபத்தைக் கட்டுப்படுத்துவோம்!

**என்னை சொர்க்கத்தில் நுழையச் செய்யும் ஒரு அமலை எனக்குக் கூறுங்கள் என்று நபி(ஸல்) அவர்களிடம் ஒருவர் கேட்டார். அதற்கவர்கள், நீ கோபம் கொள்ளாதே! உனக்கு சொர்க்கம் உள்ளது! என்றார்கள்.** *(அறிவிப்பவர் : அபூ தர்தா(ரலி), ஆதாரம் : தபரானீ)*

**ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, எனக்கு உபதேசம் செய்யுங்கள்! என்று கேட்டார். அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதே! என்று கூறினார்கள். உபதேசம் செய்ய அவர் பல முறை வேண்டிய போதும் நபி (ஸல்) அவர்கள் நீ கோபம் கொள்ளாதே! என்றே கூறினார்கள்.**

*(அறிவிப்பவர் : அபூஹுரைரா(ரலி), ஆதாரம் : புகாரி)*

**தன் கோபத்தை வெளிப்படுத்த சக்தி பெற்றிருந்தும் அதனை அடக்கிக் கொண்டவரை மறுமை நாளில் படைப்பினங்களுக்கு முன்னிலையில் அழைத்து, அவர் விரும்பிய ஹூருல்ஈனை (சொர்க்கத்து கன்னியரை) தேர்ந்தெடுத்துக் கொள்ள அல்லாஹ் அனுமதி வழங்குவான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.** *(அறிவிப்பவர் : முஆத் இப்னு அனஸ் அல்ஜுஹ்னீ(ரலி), ஆதாரம் : அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா)*

# குறுக்கெழுத்துப் போட்டி - 10



### இடமிருந்து வலம்

3. ஹராமாக்கப்பட்ட பானம் (2)
8. வித்ரு தொழுகை இந்த தொழுகையுடன் சம்பந்தப்பட்டது (2)
11. ஈமானில் பாதி (4)
13. மத்யன்வாசிகளிடையே நபியாக அனுப்பப்பட்டவர் (குர்ஆன் 11:84) (3)

### வலமிருந்து இடம்

1. கலீலுல்லாஹ் பட்டம் பெற்றவர் (5)
9. ஏழு நிறங்கள் (4)
10. நான்காம் கலீ∴பா (2)
14. விண்ணுலகப் பயணம் (4)

### மேலிருந்து கீழ்

1. ஈஸா(அலை) அவர்களுக்கு அருளப்பட்ட வேதம் (4)
2. இஸ்லாமிய உதவி நிதி நிறுவனம் (6)
4. வெற்றியின் எதிர்பதம் (3)
7. ஜித்தாவில் பிரபலமான இடம் (குர்ஆனில் 90வது அத்தியாயம் (3)

### கீழிலிருந்து மேல்

5. சமாதானப் பறவை (4)
6. நபி (ஸல்) அவர்களுக்கும், ஆயிஷா (ரலி) அவர்களுக்கும் திருமணம் நடந்த மாதம் (4)
8. நபி மூஸா (அலை) அவர்களின் தந்தை (4)
12. மறுமையில் ஒவ்வொருவரும் கடக்கவேண்டிய பாலம் - முதல் எழுத்து விடுப்பட்டுள்ளது (9)

## விதிமுறைகள்

1. விடைகளை தனித்தாளில் எழுதி உறையிலிட்டு ஸனாய்யியா இஸ்லாமிய அழைப்பகத்தில்(புதியது) நேரடியாகக் கொடுத்துவிடலாம். தபால் மூலம் அனுப்புவோர் Mr.Ibrahim(Madani), Tamil Division, P.O.Box-32628, Jeddah-21438 அல்லது suvanam@gmail.com என்கிற முகவரிக்கு **ரமலான்** மாதம் 30ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவேண்டும்.
2. விடைகளை தனித்தாளில் தெளிவாக கேள்வி எண் மற்றும் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ் மற்றும் கீழிலிருந்து மேல் ஆகியவைகளை எழுதி அனுப்பவேண்டும்.
3. நீங்கள் அனுப்பும் உறையில் உங்கள் பெயர் மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி அல்லது தொலைபேசி எண்ணை மறவாமல் குறிப்பிடவும்.
4. ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடைகளை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் பரிசு வழங்கப்படும்.
5. பரிசு பெற்றவர்கள் விபரம் மற்றும் விடைகள் ஒரு மாதம் விட்டு அடுத்த மாத இதழில் வெளிவரும்.
6. ஆசிரியர் முடிவே இறுதியானது

## குறுக்கெழுத்துப் போட்டி – 8 க்கான பரிசு பெறுபவர் விபரம்

குறுக்கெழுத்துப் போட்டி - 8 க்கான சரியான பதில்களை பலரும் எழுதியிருந்தனர். குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். பரிசு பெறுபவர்...

**முஹம்மது ∴பிர்தௌஸ்** (சவூதி ஓஜர்)

குறுக்கெழுத்துப் போட்டியில் ஆர்வத்தோடு கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து வாசகர்களுக்கும் நன்றி.

## குறுக்கெழுத்துப் போட்டி – 8 க்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஜ | றை | | 2 சி | | | | ம் |
| ன் | ண | 3 த | ங் | க | ம் | | கு |
| ன | ண் | | கை | | 4 த | பூ | க் |
| த் | 5 ம | ஹ் | 6 ர | | ரு | | லை |
| | மை | 7 இ | றா | ல் | ம | ம் | 8 அ |
| ளி | | | | 9 தூ | ம் | | மு |
| ள் | | தி | | ண் | | | லா |
| 10 வெ | ங் | 11 கா | ய | ம் | த் | ம | 12 ஸ |